பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை 1210.2021 கதிர் 205

## பதியுதீன்களின் மனு 15இல் பரிசீலனைக்கு

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை இந்த மாதம் 15 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் இன்று தீர்மானித்துள்ளது. ☞2

## அருவியாற்றில் மணல் அள்ளுவதற்கு எதிராக மன்னார் நீதிமன்றில் வழக்கு

### சுமந்திரன், சயந்தன் முன்னிலையாகி வாதம்



மன்னார் அருவியாறுப் பகுதியில் மணல் அகழ்வதற்குத் தடை விதிக்குமாறு கோரி மன்னார் நீதிவான் சிவகுமார் முன்னிலையில் நானாட்டான் பிரதேச சபையின் தலைவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சம்பந்தப்பட்ட எதிர்த்தரப்புகளை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி விளக்கம் தருமாறு உத்தரவிட்டது. ☞2

### இந்தியாவிலிருந்து தனி விமானத்தில்

## இலங்கை வந்தடைந்த சுப்ரமணியன் சுவாமி



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன் சுவாமி, தனி விமானத்தில் இன்று காலை கொழும்பை வந்தடைந்தார். ☞2

### நியூசிலாந்துக்குக் கடல் மார்க்கமாகத் தப்பிச் செல்ல முயன்ற

# வடக்கு இளைஞர்கள் 63 பேர் திருகோணமலையில் கைது!

### பொலிஸார் தீவிர விசாரணை

**(ந.லோகதயாளன்)**

திருகோணமலையில் இருந்து கடல் மார்க்கமாக நியூசிலாந்துக்குத் தப்பிச் செல்ல முயற்சித்த வடக்கு மாகாண இளைஞர்கள் 63 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடல் மார்க்கமாக நியூசிலாந்துக்குத் தப்பிச் செல்வதற்காகத் திருகோணமலை ஹோட்டல் ஒன்றிலிருந்து இன்று வெளியேறிய வேளை ☞2

## இலங்கை வந்தடைந்தார் இந்திய இராணுவத் தளபதி



இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் எம்.எம்.நரவானே மற்றும் அவரது குழுவினர் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வந்தடைந்தனர். ☞2



## கோட்டா ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் மடிவர்!

### ஐ.தே.க. பகிரங்க எச்சரிக்கை

இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் செத்து மடிவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலி - ஹக்மீமன பகுதியில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

காலி மாவட்டத்தில் தேயிலைத் தொழிற்துறைகளில் ஈடுபடுவோர் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். உரத் தட்டுப்பாடு காரணமாக தேயிலை ☞2

## சீனாவுக்குச் சார்பாக இருக்கும் வரை இலங்கைக்கு ஒருபோதும் மீட்சியில்லை

### 'மொட்டு' அரசுக்குள் இருந்தே வந்தது எச்சரிக்கை



இலங்கை சீனாவுக்குச் சார்பான நிலைப்பாட்டில் இருக்கும் வரை, அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து விடுபட முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சீன சார்பு ஆட்சியாளர்கள் உருவான நாளில் இருந்து ☞2

## கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் முதலாவது பணிப்பாளராக கந்ததாசன்

**(ந.லோகதயாளன்)**

வடக்கு மாகாணத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 13ஆவது கல்வி வலயமான கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக நா.கந்ததாசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சியைச் சேர்ந்த கந்ததாசன் இதுவரை வடக்கு மாகாண கல்வி அமைச்சில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய நிலையில் நேர்முகத் தேர்வின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் ஒரே கல்வி வலயமக இருந்த காலத்தில் 4 கோட்டங்களின் கீழ் 104 பாடசாலைகள் இயங்கின. நிர்வாக நெருக்கடியின் காரணமாக மாவட்ட கல்வி நிர்வாகத்தை இரண்டாகப் பிரிக்குமாறு கடந்த 20 ஆண்டுகளாக விடுக்கப்பட்ட கோரிக்கையின் பெயரில் தற்போது பச்சிளைப்பள்ளி ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## சீனாவுக்குச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் ருவான்வெலிசாய, தலதாமாளிகை ஆகியவற்றுக்குச் சென்றுநாட்டில்எந்ததேசியவளங்களும் விற்பனை செய்யப்படமாட்டாது என உறுதி எடுத்துக்கொள்கின்றனர்.

அவ்வாறு கூறிய ஒரு அணி 2000 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து, பொருளாதார வளங்களை விற்பனை செய்தது. இறுதியில் அவற்றைக் காப்பாற்ற வரிசையாக வழக்குகளைத் தொடர வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லங்கா வைத்தியசாலை, துறைமுகக் காணிகள், இலங்கை போக்குவரத்துச் சபை என நாட்டின் தேசிய வளங்கள் விற்பனை செய்யப்பட்டன.

வழக்குகளைத் தொடர்ந்து அவற்றை மீண்டும் பெற்றுக்கொண்டோம். இதனை அரசோ அல்லது எதிர்க்கட்சியோ செய்யவில்லை. உயிருக்கு ஆபத்து இருப்பதைக் கவனத்தில் கொள்ளாது அவற்றை நானே செய்தேன்.

கடந்த அரசின் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அம்பாந்தோட்டை துறைமுத்தை சீனாவுக்குக் குத்தகைக்குக் கொடுத்தன் நெருக்கடியைத் தற்போது இலகுவாகத் தீர்க்க முடியாது.

சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கியதால், அமெரிக்காவும் தனக்கும் அது வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளது - என்றார்.

## கோட்டா ஆட்சி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்கை வழமைக்குத் திரும்ப இன்னும் ஒன்றரை ஆண்டுகள் தேவைப்படும்.

உலகில் தரமான உரத்தை 350 ரூபாவுக்கு வழங்க முடியாது. கோட்டா பய அரசு ஆட்சியைப் பிடிக்கும் நோக்கில் பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது. தரம் குறைந்த உர வகைகளைப் பயன்படுத்துவதனால் மண் வளம் இழக்கும்.

இலங்கையில் அடுத்த ஆண்டு நடுப்பகுதி அளவில் அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை மக்களுக்கு ஏற்படும்.

தற்போதைய அரசு எவ்வித நோக்கமும், திட்டமும் இன்றி நாட்டை ஆட்சி செய்வதனால் நாடு பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. இந்த அரசின் ஆட்சி தொடர்ந்தால் பட்டினியால் மக்கள் செத்து மடிவார்கள் - என்றார்.

## பதியூதின்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிடக் கோரி தங்களது சட்டத்தரணிகள் ஊடாக மேற்குறிப்பிட்ட இருவரும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை வந்தடைந்த ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ. சானக மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோர் சுப்ரமணியன் சுவாமியை வரவேற்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் இன்று மாலை நடைபெற்ற நவராத்திரி விழாவில் சுப்ரமணியன் சுவாமி கலந்துகொள்கின்றார்.

அத்துடன், இலங்கை இராணுவத்தின் 72ஆவது நிறைவையொட்டி நடத்தப்படும் இராணுவக் கருத்தரங்கொன்றிலும் அவர் உரையாற்றவுள்ளார்.

## அருவியாற்றில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் எம்.பி இன்று மன்னார் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் கேசவன் சயந்தன், சிராய்வா ஆகியோர் சகிதம் முன்னிலையாகி இந்த வழக்கை சமர்ப்பித்தனர்.

அருவியாறு பரிகாறக்கண்டல், ஆத்தி மோட்டை. பன்னவெட்டுவான், அடியாச்சிக்குளம் பகுதிகளில் வகை தொகையின்றி மணல் அள்ளப்படுவதாக பிரதேச சபைத் தலைவர் தி.பரஞ்சோதி தமது சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கமத்தொழில் திணைக்களம் இந்த ஆற்றுப்படுக்கையில் மணல் அள்ளக் கூடாது என உத்தரவிட்டுள்ளதாக அறிகிறோம்.

புவிசரிதவியல். அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகம் மணல் அள்ளுவதற்கு வழங்கிய அனுமதி கூட கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. ஆனால் அதன் பின்னரும் மணல் அள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் பெரும் சூழலியல் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக வழக்காளிகள் தரப்பில் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

விடயத்தை பரிசீலித்த நீதிவான் எதிராளிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றில் பிரசன்னமாகி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டார்.

## இலங்கை வந்தடைந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் எம். எம்.நரவானே மற்றும் திருமதி வீணா நரவானே ஆகியோரை இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வரவேற்றார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தின்போது, ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை முப்படைகளின் தளபதிகளை இந்திய இராணுவத் தலைமைத் தளபதி சந்திக்கவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெறும் இந்திய - இலங்கை இருதரப்பு மித்ரா சக்தி இராணுவப் பயிற்சியையும் அவர் பார்வையிடவுள்ளார்.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு மேலும் வலுவடைய இந்த விஜயம் வழிவகுக்கும் என்று இந்திய இராணுவத் தளபதியின் விஜயம் குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதரகம் கருத்து வெளியிட்டுள்ளது.

## கிளிநொச்சி வடக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கண்டாவளை கோட்டங்களைச் சேர்ந்த 38 பாடசாலைகள் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இதேநேரம் கரைச்சி, பூநகரி கோட்டங்களைச் சேர்ந்த 66 பாடசாலைகள் தொடர்ந்தும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கீழ் இயங்குகின்றது.

## வடக்கு இளைஞர்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்கள் தீவிர விசாரணைக்காகத் திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# கடனில் ஓடும் நாடு

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இருநூற்றியைம்பது கோடி டொலர் (சுமார் 55 ஆயிரம் கோடி ரூபா) கடன் பெற்றமையில் பெரும் மோசடி இடம்பெற்றிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்திருக்கின்றார்.

அந்த கடன் பெற்றுக்கொண்ட முறைமையில் பெரும் குளறுபடி இருப்பதாக அவர் குற்றம் சாட்டுகின்றார். இந்த கடனைப் பெற்றுக்கொடுத்த கம்பனி என்ற பெயரில் ‘சென்செப்ட் குளோபல்’ என்ற நிறுவனம் ஏழு வித தரகுப் பணமாக 17 கோடி 50 லட்சம் டொலர்களை (சுமார் 3 ஆயிரத்து 250 கோடி ரூபாவை) பெற்றிருப்பதாக ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் தகவல் வெளியிட்டிருக்கின்றார்.

இந்தத் தரகுப் பணம் பெற்ற கம்பனியின் உரிமையாளர் கெனத் டி லா மோட் என்று தெரிவிக்கப்படுகின்றது. அந்தக் கம்பனி ராஜகிரியவில் இயங்குவதாக ஒரு விலாசம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அது ஒரு சாதாரண வீட்டின் முகவரி. அங்கு நிறுவன பெயர் பலகை கூட இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா உண்மையைப் போட்டு உடைத்து இருக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பெற்றோலியத்துறை அமைச்சர் உதய கம்மன்பில்ல நாடாளுமன்றத்தில் பதில் தந்துள்ளார்.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அவசரம் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு கடன் கோர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. உள்ளூர்க் கடனுக்கே முதலில் முயன்றோம். இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் சேர்ந்து 360 கோடி டொலர் ( சுமார் எண்பதாயிரம்) கோடி ரூபா கடன் வழங்க இணங்கின. ஆனால் 5.5 என்ற வட்டி வீதத்திலேயே அது வழங்கப்பட்டது.

அதேநேரம் அந்நிய செலாவணி பெறுவதில் நெருக்கடி இருந்தமையால் வெளிநாட்டில் டொலராகக் கடன் பெற முயற்சி எடுக்கப்பட்டது. அமெரிக்காவின் நியூ ஜெர்ஸியைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு வங்கிதனை வழங்க முன்வந்தது. எனினும் வட்டி வீதம் 3.25 தான்.

இவ்வளவு குறைந்த வீதத்தில் நீண்ட காலம் கடன் கிடைப்பதால் இதை தவறவிடாமல் பெற முயற்சித்தோம். அதற்கான தரகுப்பணம் உரிய தரப்புக்குக் கொடுக்கப்பட்டது. இது வெளிப்படையான நடவடிக்கை – என்று விளக்கமளித்திருக்கிறார் பெற்றோலிய அமைச்சர் உதய கம்மன்பில.

மிகக் குறைந்த வட்டி வீதம் என்பதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குப் பெருமளவு சாதகம் உண்டு. கணிசமான நிதியை மிச்சமாகப் பெற முடியும். இத்தகைய வட்டி குறைந்த கடன் பெறுவதற்கான வாய்ப்பைச் சரிவர பயன்படுத்தாவிட்டாலும் எதிரணிகள் எம்மை விமர்சிக்கும். அந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தினாலும் எதிரணிகள் எம்மைத் தூற்றும் என்றார் அவர். பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டை அதிலிருந்து மீட்கும் அவசர நடவடிக்கை என்ற பெயரில் மீண்டும் மீண்டும் புதிய கடன்கள் வாங்கி குவிக்கப்படுகின்றன. போகிற போக்கு பொருளாதார நெருக்கடியில் இருந்து நம்மை மீட்பதாக அமையப் போவதில்லை என்பது தெளிவு. மாறாக, நம்மை மேலும் மேலும் கடன் சகதிக்குள் – பொறிக்குள் – மாட்டுவதில்தான் அது போய் முடியப் போகின்றது என்பது துலாம்பரமாகத் தென்படுகின்றது.

நாடு இக்கட்டில். தரகு ‘புரோக்கர்களோ’ கோடீஸ்வரர்களாகின்றனர்.

நாட்டை பெரும் கடன் சாகரத்தில் மூழ்கடித்து விட்டு, பெற்றோலின் விலையை எகிற வைக்கும் கைங்கரியத்தைத் தான் பெற்றோலிய அமைச்சர் பெரும் சாதனையாக முன்னெடுக்கிறார்.

இப்படிக் கடன் வாங்கிக் கல்யாணம் என்ற இலங்கையின் பொருளாதாரக் கொள்கை நாட்டை நிரந்தரமாக பெரும் அவலத்துக்குள் மூழ்கடிக்கப் போகின்றது என்பது திண்ணம்.




# வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு சுகாதாரப் பணியாளர்கள் போராட்டம்

வடக்கிலுள்ள சுகாதாரப் பணியாளர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி போராட்டம் ஒன்றை நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு, அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு வருடங்களாகத் தற்காலிக சுகாதார உதவியாளராக யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய 62 பேருக்கு, சுகாதார அமைச்சின் நிரந்தர நியமனக் கடிதங்கள் சில தினங்களுக்கு முன்பு வழங்கி வைக்கப்பட்டதை எதிர்த்தே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நேற்று நண்பகல் 12 மணியளவில் ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக இருந்து பேரணியாக புறப்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், பண்ணையிலுள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையை முற்றுகையிட்டு, போராட்டத்தில் ஈடுபட்டு நியாயம் கோரினர்.

மேலும் “சுகாதார சேவைகள் பணிப்பாளர் இந்த இடத்துக்கு வரவேண்டும், நீதியை எமக்குத் தர வேண்டும், எமக்கு வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்து’’ போன்ற கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களாக எழுப்பினர்.

இதன்போது, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் தற்போது பொறுப்பான அதிகாரிகள் இல்லை என்றும் அதே நேரம் பிறிதொரு தினத்தில் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருகிறோம் எனவும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்தார்.

குறித்த உத்தியோகத்தர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு - மாகாண சுகாதார அமைச்சு எந்தவிதமான நியமனங்களையும் தற்போது வழங்கவில்லை. மத்திய அரசு வழங்கும் நியமனங்களுக்கு நாங்கள் எந்த வகையிலும் பொறுப்புக் கூற முடியாது. அதற்குப் பதில் வழங்க வேண்டியது ஆளுநரே. - என சுட்டிக்காட்டியுள்ளார். இதனை ஏற்க மறுத்த சுகாதாரப் பணியாளர்கள், நாங்கள் நீண்ட காலமாகப் பணியாற்றி நிரந்தர நியமனத்துக்காகக் காத்திருக்கும் பொழுது எம்மைத் தவிர்த்து விட்டு தற்போது வந்தவர்களுக்கு நியமனத்தை வழங்குவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தொடர்ந்து ஏமாற்று வார்த்தைக்கு இணங்க முடியாது என்றும் உடனடியாக நிரந்தர நியமனத்தை உறுதிப்படுத்தக் கோரியும் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# சிறப்பு விமானத்தில் கென்யா பயணமா?




கென்யாவுக்கு சிறப்பு விமானத்தில் பயணித்தார் எனக் கூறப்படும் சர்ச்சைக்குரிய தகவலை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

அந்த வகையில், கென்யா தலைநகருக்குத் திட்டமிட்ட விமானத்தில் பயணம் செய்தார் எனவும், சிறப்பு விமானத்தில் பயணம் மேற்கொள்ளவில்லை என்றும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கென்யாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்துக்கு ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விமானமொன்றை முழுமையாக முன்பதிவு செய்தார் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் இந்த விவகாரத்தை அவர் மறுத்து, தனது பயணம் தொடர்பாக விளக்கமளித்துள்ளார். அத்துடன் கென்யாவுக்கான விஜயத்தின் போது அவர் விளையாட்டு, சுற்றுலா மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்களுடன் பேச்சு நடத்தினார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டில் வைத்துப் போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் ஏழாலையில் கைது!

ஏழாலையில் வீட்டில் வைத்து போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 6 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய 9 ஆயிரத்து 60 போதை மாத்திரைகள் சந்தேக நபர்களிடம் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். ஏழாலையைச் சேர்ந்த 38 வயதுடைய நபரே இவ்வாறு நேற்று (திங்கட்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்படவுள்ளார்.

# ஆயுதங்களை அதிகரிப்பது தற்காப்புக்காக மட்டுமே!

## வடகொரிய தலைவர் தெரிவிப்பு



ஆயுதங்களை அதிகரிப்பது தற்காப்புக்காக மட்டுமே போரைத் தொடங்குவதற்கு அல்ல என வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

அதிகாரப்பூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனம் படி கேசிஎன்ஏ, 'சுய பாதுகாப்பு 2021' என்ற பெயரில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற பாதுகாப்பு கண்காட்சியைத் தொடங்கிவைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'தென் கொரியாவின் ஆயுதக் குவிப்பும், அமெரிக்காவின் விரோதக்கொள்கைகளுமேவடகொரியாவின் ஆயுத மேம்பாட்டு நட வடிக்கைகளுக்குக் காரணம்' என கூறினார்.

பைடன் நிர்வாகம் பியோங்யாங்கிற்கு எந்தவிதமான விரோத நோக்கமும் இல்லை என்று பலமுறை கூறியுள்ளது. ஆனால், 'அதை நம்பும் நபர்கள் அல்லது நாடுகள் இருந்தால் அதனை அறிய தான் மிகவும் ஆர்வமாக உள்ளேன். இது விரோதமானது அல்ல என்று நம்புவதற்கு அவர்களின் நடவடிக்கைகளில் எந்த அடிப்படையும் இல்லை' என கூறினார். சமீபத்திய வாரங்களில் வடகொரியா, நீண்ட தூர கப்பல் ஏவுகணை, ரயிலில் இருந்து ஏவும் ஏவுகணை, மற்றும் ஹைப்பர்சோனிக் என அடுத்தடுத்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.



# சீனாவில் கடும் வெள்ளம் 17.6 லட்சம் பேர் பாதிப்பு

சீனாவின் வடக்கு ஷாங்க்சி மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 17.6 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் பெய்த பலத்த மழையால் 70க்கும்மேற்பட்ட மாவட்டங்கள்மற்றும்மாகாணங்களில் உள்ள வீடுகள் இடிந்து விழுந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெனான் மாகாணத்தில் தீவிர மழை பெய்து மூன்றுமாதங்களுக்குள்வெள்ளம்வந்து300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கனமழை மற்றும் நீடித்த மழை மற்றும் புயல்கள், மீட்புப் பணிகளுக்கு இடையூறாக உள்ளன என சீனாவின் வானிலை நிர்வாகம் உள்ளூர் ஊட கங்களிடம் கூறியுள்ளது.

120,000க்கும் அதிகமான மக்கள் அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டு மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் எனவும், ஷாங்க்சி மாகாணம் முழுவதும்17,000 வீடுகள் இடிந்து விழுந்துள்ளன எனவும் அதிகாரிகள், சின்ஹுவா செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தனர். மேலும், 189,973 ஹெக்டேயர் பயிர்கள் முற்றிலும் நாசமாயின.

நிலச்சரிவின் விளைவாக நான்கு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்து விட்டனர் என அரசாங்கம் நடத்தும் குளோபல் டைம்ஸ் கூறுகிறது. இருப்பினும் மற்ற உயிரிழப்புகள் பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை. இந்த ஆண்டு தொடக்கத்தில்ஹெனானில்ஏற்பட்ட வெள்ளத்தைவிட ஷான்சி வெள்ளம் மோச மானது என தெரிவிக்கப்படுகின்றது. ஷாங்க்சியின் மாகாண தலைநகர் தையுவான் கடந்த வாரம் சராசரியாக 185.6 மி.மீ. மழைப் பொழிவைக் கண்டது.

# ஈராக் நாடாளுமன்றத் தேர்தல் மிகக் குறைந்த அளவில் வாக்குப் பதிவு!

அமெரிக்கா தலைமையிலான 2003ஆம் ஆண்டு படையெடுப்பைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட ஜனநாயக முறைக்கு ஆதரவு குறைந்து வரும் நிலையில், ஈராக்கின் நாடாளுமன்றத் தேர்தலில் மிகக் குறைந்த வாக்குகள் பதிவாகியுள்ளன.

திட்டமிட்டதைவிட ஓராண்டுக்கு முன்னரே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை) நடைபெற்ற தேர்தலில், 11 மணிநேர வாக்கெடுப்பைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு வாக்குப்பதிவு முடிவடைந்தது.

ஈராக்கிய தேர்தல் ஆணையத்தின்படி, சுமார் 41 சதவீத வாக்காளர்களே வாக்களித்தனர். தகுதிவாய்ந்த வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அளிக்க முன்வந்தனர். ஈராக்கின்தேர்தலை மேற்பார்வையிடும் சுயாதீன அமைப்பின் படி, அடுத்த 48 மணி நேரத்திற்குள் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆனால் அரசாங்கத்தை அமைக்கும் பணியை ஒரு பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான பேச்சு வாரங்கள் அல்லது மாதங்கள் வரை இழுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஈராக்கின் தெற்கு மாகாணங்களில், ஊழலுக்கு எதிராகவும் அரசியல் சீர்திருத்தங்களை வலியுறுத்தியும் பொதுமக்கள் கடந்த 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தீவிர போராட்டத்தில்



ஈடுபட்டனர். இதில் 600க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

போராட்டத்தை அடக்க அரசாங்கம், அடக்குமுறையைக் கையாண்டதால்இந்தத்தேர்தலைப் புறக்கணிக்கிறோம் பல போராட்டக் குழுவினர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

நீண்டகால ஆட்சியாளர் சதாம் ஹுசைன் 2003இல் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் ஐந்து தேர்தல்களில் மிகக் குறைந்த வாக்கு எண்ணிக்கையைக் இது குறிக்கிறது. முந்தைய குறைந்தபட்சம் 2018இல் பதிவு செய்யப்பட்டது. அப்போது 44.5 சதவீத

# செயல்கள் மூலமே தலிபான்கள் மதிப்பிடப்படுவார்கள்; அமெரிக்கா



ஆப்கானிஸ்தானை ஆளும் தலிபான்கள் தங்களது செயல்கள் மூலமாகவே மதிப்பிடப்படுவார்களே அன்றி, அவர்களது சொற்கள் மூலமாக அல்ல என்று அமெரிக்கா கூறியுள்ளது.

ஆப்கானிஸ்தானில் ஆட்சி மாறிய பிறகு கட்டார் தலைநகர் டோஹாவில் நடந்த முதல் பேச்சுக்குப் பின்னர் இந்தக் கருத்தை அமெரிக்கா தெரிவித்துள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் கூறியுள்ளது. இது தொடர்பாக வொஷிங்டனில் அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் வெளியிட்ட அறிக்கையில், பாதுகாப்பு, பயங்கரவாதம் தொடர்பான கவலைகள் மற்றும் அமெரிக்க குடிமக்கள் பத்திரமாக வெளியேறுவது ஆகியவற்றை மையப்படுத்தியே பேச்சு இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு நேரடியாக மனிதநேய உதவிகளைச் செய்வது குறித்து இருதரப்பும் விவாதித்ததாகவும் பிரைஸ் கூறியுள்ளார்.

தலிபான்களுடனான பேச்சு நேர்மையாகவும் அலுவல்ரீதியாகவும் இருந்ததாக பிரைஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் வசமுள்ள அமெரிக்கப் பத்திரிகையாளரை விடுவிக்க வேண்டும் என பைடன் நிர்வாகம் பேச்சுக்கு முன்னதாக கோரிக்கை விடுத்திருந்தது

# நிலக்கரித் தட்டுப்பாட்டால் தமிழகத்தில் மின்வெட்டு ஏற்படாது என அமைச்சர் செந்தில் பாலாஜி உறுதி



தமிழ்நாட்டில் மின் உற்பத்தி 43 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது என அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்திருக்கிறார். இந்தியாவில் பல மாநிலங்களிலும் நிலக்கரித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப்பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

திருச்சியில் நிருபர்களுக்கு பேட்டியளித்த அவர், நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் தொன் நிலக்கரி தமிழகத்திற்குத் தேவைப்படுகிறது. தற்போது கையிருப்பில் இருக்கக்கூடிய நிலக்கரியை மாநிலங்களின் தேவைக்கேற்ப மத்திய அரசு பிரித்து வழங்குகிறது. தொடர்ந்து தினமும் 60 ஆயிரம் தொன் நிலக்கரி எடுத்துவருகிறோம். தமிழ்நாட்டில் மின் உற்பத்தி 43 சதவீதத்தில் இருந்து 70 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழகத்திற்குத் தேவையான அளவுநிலக்கரிவந்துகொண்டிருக்கிறது. விவசாயத்திற்கு தேவையான இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். நிலக்கரித் தட்டுப்பாடு காரணமாக தமிழகத்தில் மின்வெட்டு ஏற்படாது. மின்வெட்டு இல்லாத தமிழகத்திற்காக முதலமைச்சர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தமிழகத்தில் ஒரு நொடிப் பொழுதுகூட மின்வெட்டு இருக்கக் கூடாது என முதலமைச்சர் கடுமையாக உத்தரவிட்டுள்ளார், எனத் தெரிவித்திருக்கிறார்.

## லக்கிம்பூர் வன்முறைச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் மகனுக்கு 3 நாள் பொலிஸ் காவல்

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தின் லக்கிம்பூர் கேரி மாவட்டத்தில் கடந்த 3ஆம் திகதி போராட்டம் நடத்திய விவசாயிகள் மீது பா.ஜ.க.வினர் சென்ற வாகனம் மோதியது. இதில், சில விவசாயிகள் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையில் மொத்தம் 4 விவசாயிகள், ஒரு பத்திரிக்கையாளர் உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

விவசாயிகள் மீது மோதிய வாகனத்தில் மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ராவின் மகன் ஆஷிஷ் மிஸ்ரா இருந்தார் எனக் கூறப்படுகிறது. அது தொடர்பான ஆதாரங்களாக சில காணொலிகளும் வெளியாகியிருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பாக ஆஷிஷ் மிஸ்ரா மீது கொலைவழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி விசாரணைக்கு ஆஜரான ஆஷிஷ் மிஸ்ரா, 12 மணி நேர விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்டார். அவரை 14 நாள்கள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.



இந்த நிலையில், ஆஷிஸ் மிஸ்ராவை காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி கோரி பொலிஸார் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம், நிபந்தனைகளுடன் 3 நாள்கள் அவரைக் காவலில் எடுத்து விசாரிக்க பொலிஸாருக்கு அனுமதி அளித்துள்ளது.



**ஜாக்கி சான் மன்னிப்புக் கேட்டார் என**

## ஷாருக்கானை சாடினார் நடிகை கங்கனா ரனாவத்

மும்பையில் இருந்து கோவா சென்ற உல்லாசக் கப்பலில் நடைபெற்ற விருந்தில் தடை செய்யப்பட்ட போதைப் பொருள்களைப் பயன்படுத்திய விவகாரத்தில் பாலிவுட் நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கானும் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஷாருக்கானின் மகனுக்கு ஆதரவாக பாலிவுட் பிரபலங்களான திரைப்படத் தயாரிப்பாளர் ஹன்சல் மேத்தா, நடிகர்கள் ஹிருத்திக் ரோஷன், பூஜா பட் போன்றோர் தமது சமூக வலைத்தளப் பக்கங்களில் கருத்துக்களைப் பதிவிட்டிருந்தனர். இந்நிலையில், சமூக வலைத் தளங்களில் சர்ச்சைக் கருத்துக்களைப் பதிவிடும் நடிகை கங்கனா ரணாவத், இந்தப் பிரச்சினையை வைத்தும் இன்ஸ்டாகிராமில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், ஹாலிவுட் நடிகர் ஜாக்கிசான், தனது மகன் போதைப்பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டபோது பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டார். மகனின் செயலுக்கு தான் வெட்கப்படுகிறேன். இது தனது தோல்வி. இந்த விவகாரத்தில் அவரை பாதுகாக்கும் செயலில் ஈடுபடமாட்டேன் என்று கூறியிருந்தார், என்பதைப் பதிவு செய்துள்ளார். justsaying என்ற ஹாஷ்டக்கில் இதை அவர் வெளியிட்டுள்ளார்.

இதன் மூலம் ஷாருக்கானை பெயர் குறிப்பிடாமல் நடிகை கங்கனா விமர்சித்துள்ளார். கங்கனாவின் இந்தப் பதிவு சமூக வலைத்தளங்களில் பரவலான கருத்தாடலை ஏற்படுத்தி இருக்கிறது.

## தமிழக மாவட்ட உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது

தமிழகத்தில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, நெல்லை, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் கடந்த 6, 9 ஆகிய திகதிகளில் இரு கட்டங்களாக ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. 74 ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் 23,998 பதவியிடங்களுக்கு நடந்த இந்தத் தேர்தலில் 79,433 பேர் போட்டியிட்டனர்.

14,573 வாக்குச்சாவடிகளில் நடந்த இந்தத் தேர்தலில் இருகட்டங்களையும் சேர்த்து மொத்தம் 77.95 சதவீத வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவுகள் முடிவடைந்த நிலையில் வாக்குப்பதிவுக்காக பயன்படுத்தப்பட்ட 41,500 வாக்குப்பெட்டிகள் 74 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன.

இன்று காலை 8 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

ஊராட்சித் தலைவர், ஊராட்சி வார்ட் உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கான தேர்தல் முடிவுகள் வாக்குகள் எண்ணத் தொடங்கிய சில மணி நேரத்திலிருந்து வெளிவர ஆரம்பித்துள்ளன. ஊராட்சி ஒன்றிய வார்ட் கவுன்ஸிலர் பதவிகளுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணி முடிக்க அதிக நேரம் ஆகலாம் எனத் தெரிகிறது. எனவே, முடிவை அறிவிக்க நள்ளிரவு வரை ஆகலாம் என்றும் கூறப்படுகிறது.

அனைத்து வாக்கு எண்ணும் மையங்களிலும் மூன்றடுக்கு காவல்துறைப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தேர்தல் முடிவை அறிவிக்கும்போது பல இடங்களில் மோதல்கள் நடப்பதற்கு வாய்ப்புள்ளதால் வாக்கு எண்ணும் மையங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த 9 மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய 28 மாவட்டங்களில் 789 காலி இடங்களுக்கு நடந்த தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கையும் இன்று நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கிரான் அம்பலாவடியூத்து குளத்தின் புனரமைப்புக்கு அடிக்கல் நாட்டல்



கிரான் பேரில்லாவெளி பிரதேசத்தின் தடானை கிராமத்தைச் சேர்ந்த அம்பலாவடியூத்து குளத்தின் புனரமைப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இப்புனரமைப்பு திட்டமானது வேள்ட் விஷன் லங்காவின் இயற்கைமுறை விவசாயத்திட்டத்தினால், மட்டக்களப்பு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தோட்ட பயிர்ச்செய்கை மற்றும் விவசாய நடவடிக்கைகளை வாழ்வாதாரமாகக் கொண்ட இப்பிரதேச மக்கள் இதுவரை பெரும்போக பயிர்ச்செய்கையில் மட்டுமே ஈடுபட்டு வந்த நிலையில், இக்குளம் புனரமைக்கப்படுவது அவர்கள் பெரும்போகம் மற்றும் இடைப்போகத்திலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள ஏதுவாக அமையவிருக்கின்றது.

அம்பலாவடியூத்து குளத்தின் புனரமைப்புப்பணி நிறைவு பெற்றுநவம்பர், 2021காலப்பகுதியில் பாவனைக்கு ஈடுபடுத்தப்படும் போது சுமார் 200 குடும்பங்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமையும். நேற்று இடம்பெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் வேள்ட் விஷன் இயற்கைமுறை விவசாயத்திட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்திதிணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேசத்தை சேர்ந்த விவசாயச்சங்க உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

வேள்ட் விஷன் லங்காவின் இயற்கைமுறை விவசாயத்திட்டமானது, கொய்க்காவின் (கொரிய நிறுவனம்) நிதிப்பங்களிப்பில் கடந்த 9 வருடங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நஞ்சற்ற விவசாய முறைகளை ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தனது வயலினை பார்வையிடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்பு

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட திக்கோடை பிரதேசத்தில் தனது வயலினை பார்வையிடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் மரணமான நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் களுதாவளை பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கிருஷ்ணபிள்ளை கந்தசாமி வயது (63) என்பவரே தனது வீட்டிலிருந்து திக்கோடை பிரதேசத்தில் உள்ள தனது வயலினை பார்வையிடச்சென்றார் எனவும் அதன் பின்னர் தனது வயலில் மயக்கமுற்று கிடந்ததனை கண்ட அருகில் நின்ற நபர் ஒருவர் வீதியில் சென்றவர்களின் உதவியுடன் களுவாஞ்சிகுடி ஆதாரவைத்தியசாலைக்கு கொண்டு சென்ற வேளை கடமையில் இருந்த வைத்தியர்கள் பரிசோதித்த போது குறித்த நபர் மரணமடைந்த நிலையில் கொண்டு வரப்பட்டதனை உறுதிப்படுத்தினர் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் க.ஜீவராணி அவர்களின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்திற்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டமையுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்ல பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## கந்தளாய் கார் விபத்தில் பொலிஸ் அதிகாரி சாவு

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் காரொன்று விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அதிகாரியொருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதோடு, காரின் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தருமான மற்றொருவர் படுகாயங்களுடன் கந்தளாய் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என கந்தளாய் பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றிரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில் மாத்தளை பகுதியைச் சேர்ந்த டி.எல் சிறிசேன 55 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையிலிருந்து கந்தளாய்க்குச்சென்றகார் புகையிரத கடவையை கடக்க முற்பட்ட போத இவ்வாறு விபத்துக்குள்ளானதாகவும் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை தூக்கத்தினாலே இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள்.

## தனியார் விடுதியில் தங்கியிருந்த மூன்றுபேர் மருத்துவமனையில்

*திருகோணமலை தலைமை யக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ராஜவரோதயம் வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இரண்டு பெண்கள் உட்பட குழந்தை ஒருவரும் நஞ்சருந்திய நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியிலிருந்து 29, மற்றும் 19 வயதுடைய இரு பெண்கள் மற்றும் இரண்டரை வயதுடைய குழந்தை மூவரும் திருகோணமலையிலுள்ள தனியார் விடுதியில் நேற்று தங்கியிருந்தமையுடன், இருவரும் நேற்று காலை 11 மணி வரை கதவை திறக்காததன் காரணமாக விடுதி உரிமையாளர் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.*

*இதனையடுத்து குறித்த இடத்திற்கு வருகைதந்த பொலிஸாரால் நஞ்சருந்திய மூவரும் மீட்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையுடன் இரண்டு பேர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த நபர்கள் மதுவுடன் நஞ்சினை சேர்த்து அருந்தியுள்ளனர் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவரிகிறது இருந்த போதிலும் இவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.*



காலைக்கதிர் மாலைப்பதிப்பு







# இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் வாய்ப்பு கொல்கத்தா தக்கவைத்தது; பெங்களூர் அவுட்!

ஐ.பி.எல். தொடரின் வெளியேற்றுப் போட்டியில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை 4 விக்கெட்டுக்களால் வென்றது. இதன் மூலம் இறுதிப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பைத் தரக்கூடிய இரண்டாவது தகுதிப் போட்டியில் அந்த அணி, டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

சார்ஜாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களை எடுத்தது. விராட் கோலி 39 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். கொல்கத்தா அணியின் சுனில் நரைன் 4 விக்கெட்டுக்களையும் லோக்கி பெர்குசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொல்கத்தா அணி 19.4 ஓவர்களில், 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்தது.

சுப்மன் கில் 29 ஓட்டங்களையும் வெங்கடேஷ் ஐயர் மற்றும் சுனில் நரைன் ஆகியோர் தலா 26 ஓட்டங்களையும் சேர்த்தனர். பெங்களூர் அணியின் மொஹமட் சிராஜ், ஹர்சல் பட்டேல் மற்றும் சஹால் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக சுனில் நரைன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி, இறுதிப்போட்டிக்கான தெரிவுப் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. அந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணி, வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் சென்னை அணியோடு மோதும்.



## ஒரு சீசனில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய பிராவோ சாதனையை சமன் செய்தார் ஹர்ஷல் பட்டேல்

ஐ.பி.எல். தொடரில் நேற்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகளுக்கிடையிலான நடந்த போட்டியில் பெங்களூர் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஹர்ஷல் பட்டேல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் இந்த ஐ.பி.எல். தொடரில்அவரதுவிக்கெட்டுக்களின் எண்ணிக்கை 32 ஆக உயர்ந்தது. இதையடுத்து, ஐ.பி.எல். போட்டியில் ஒரு சீசனில் அதிக விக்கெட் வீழ்த்தியவரான சென்னை வீரர் டுவெய்ன் பிராவோவின் சாதனையை அவர் சமன் செய்தார்.

2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல். சீசனில் சென்னை அணியின் டுவெய்ன் பிராவோ மொத்தமாக 32 விக்கெட்க்களை வீழ்த்தியிருந்தார். இதுவே ஒரு ஐ.பி.எல். சீசனில் பந்துவீச்சாளர் ஒருவரால் வீழ்த்தப்பட்ட அதிகூடிய விக்கெட் எண்ணிக்கையாக உள்ளது. பெங்களூர் அணி, நேற்றைய போட்டியில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறியிருப்பதால், குறித்த சாதனையைச் சமப்படுத்தியிருக்கும் ஹர்ஷல் பட்டேலுக்கு அதனை முறியடிக்கும் வாய்ப்பு இல்லாமல் போயிருக்கிறது.

## சாவ் கால்பந்தாட்டத் தொடர் இந்திய அணிக்கு முதல் வெற்றி



மாலைதீவுகளில் நடைபெற்று வரும் 13 ஆவது தெற்காசிய கால்பந்தாட்டச் சம்பியன்ஷிப் (சாவ்) போட்டித்தொடரில் இந்திய அணி தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளது.

5 அணிகள் பங்கேற்றுள்ள இந்தத் தொடரில் இந்திய அணி தனது முதல் இரண்டு லீக் ஆட்டங்களில் பங்களாதேஷ் அணியுடன் 1-1 எனவும், இலங்கையுடன் 0-0 எனவும் சமநிலை முடிவுகளையே பெற்றது.

இந்த நிலையில் உலகத் தர வரிசையில் 107 ஆவது இடத்தில் இருக்கும் இந்திய அணி, 168 ஆவது இடத்தில் உள்ள நேபாளத்துடன் மோதியது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றால்தான் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பினைத் தக்கவைக்க முடியும் என்ற நெருக்கடியுடன் ஆடிய இந்திய அணி, கோல் அடிக்க பல வாய்ப்புகளை உருவாக்கினாலும் நேபாளத்தின் தடுப்பு அரணை எளிதில் தகர்க்க முடியவில்லை. இறுதியாக 82 ஆவது நிமிடத்தில் இந்திய அணித்தலைவர் சுனில் சேத்ரி கோலொன்றை அடித்தார். அதன் பின்னர் இரு அணிகளும் கோலெதனையும் அடிக்கமுடியாது போக, முடிவில் இந்திய அணி 1-0 என்ற கோல் கணக்கில் நேபாளத்தை வீழ்த்தி முதல் வெற்றியைப் பெற்றது.

தனது 123 ஆவது போட்டியில் ஆடிய இந்திய அணித்தலைவர் சுனில் சேத்ரி இந்தப் போட்டியில் அடித்தது அவரது 77 வது கோலாகும். இதன் மூலம் சர்வதேசப் போட்டியில் தலா 77 கோல்கள் அடித்து அதிக கோல் அடித்த வீரர்கள் பட்டியலில் எட்டாவது இடத்தில் இருக்கும் பிரேஸிலின் பீலே, ஐக்கிய அரபு இராச்சியத்தின் அலி மப்ஹோட் ஆகியோரின் சாதனையை அவர் சமன் செய்தார். 3 லீக் ஆட்டங்கள் முடிவில் மாலைதீவுகள், நேபாள அணிகள் தலா 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று முதல் இரு இடங்களை வகிக்கின்றன. கடைசி லீக் ஆட்டத்தில் இந்திய அணி, மாலைதீவுகளை எதிர்கொள்கிறது. இதில் வெற்றிபெற்றால் இந்திய அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற முடியும்.

## லங்கா பிறீமியர் லீக் தொடரில் விளையாட 74 வெளிநாட்டு வீரர்கள் இறுதிப் பட்டியலில்

இலங்கையில் இரண்டாவது முறையாக நடைபெறவுள்ள லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடருக்காக பதிவுசெய்துள்ள சர்வதேச வீரர்களின் விவரத்தை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இந்தத் தொடருக்கான வீரர்கள் பதிவு கடந்த செப்டெம்பர் 25 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 7 ஆம் திகதி வரை நடைபெற்றிருந்தது. விண்ணப்பித்தவர்களிலிருந்து 74 பேர் கொண்ட பட்டியலை இலங்கைக் கிரிக்கெட் சபை இறுதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரிஸ் கெயில், டுவைன் ஸ்மித், அன்ரே ரசல், ஷிம்ரொன் ஹெட்மயர், பகர் சமான், ஷஹீட் அப்ரிடி, சொஹைப் மலிக், மொஹமட் ஆமிர், இம்ரான் தாஹிர், பப் டு பிளெசிஸ், யூசுப் பதான், இர்பான் பதான், ஜேம்ஸ் போல்க்னர், டேவிட் மலன், அடில் ரஷீட், ஒலி ரொபின்ஸன் போன்ற பல பிரபல வீரர்கள் இந்த 74 பேர்கொண்ட பட்டியலில் உள்ளனர்.

எல்.பி.எல். அணியொன்று விளையாடும் பதினொருவரில் அதிகபட்சமாக 6 வெளிநாட்டு வீரர்களை இணைக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்து




மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கமும்,உரிய அமைச்சுக்களும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் விவசாயிகளும், மீனவர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பிற்பாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இரசாயன பசளையை நிறுத்தி சேதன பசளை மூலம் இலங்கையில் உற்பத்தியை மேற்கொள்ள உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முயற்சிகளை முன்னெடுத்துள்ளார்.

ஆனால் அந்த முயற்சி முழுமையாகத் தோல்வியடைந்து விவசாயிகள் தற்போது வீதியில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சேதன பசளையும் இல்லை.

விவசாயிகள் நெல் விதைக்கும் ஆரம்ப கால பகுதியில் பசளை இல்லாமல் எவ்வாறு விதைப்பது என்று உள்ளனர். விவசாயிகளும் விவசாய அமைப்புக்களும் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளவுள்ளன என தெரிவித்து வருகின்றன.

நாட்டில் உள்ள விவசாய அமைச்சு விவசாயிகளுக்குப் பசளை வழங்காத நிலையில் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, விவசாயிகளுக்கு பசளையைக் கொடுத்து உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்து நாட்டு மக்களுக்கு அரிசி வழங்க முயற்சி எடுப்பதா? அல்லது பசளையை நிறுத்தி வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கி விவசாயிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதா? என்ற சிந்தனையில் இருக்கிறார்கள்.

தற்போது அரசாங்கம் அரிசியின் விலையைக் குறைப்பதற்கு அல்லது அவர்கள் தங்களுடைய சொந்த இலாபத்துக்காக அரிசியை இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

விவசாயிகளுக்குப் பசளையை வழங்கி இருந்தால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை.

எனவே அரசாங்கம் உடனடியாக விவசாயிகளின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை இந்திய மீனவர்களுக்கிடையில் தொடர்ச்சியாகப் பிரச்சினைகள் இடம்பெற்று வருகின்றன. யுத்தத்துக்கு பிற்பாடு இந்திய இழுவைப் படகுகள் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இலங்கையின் வட கடல் பகுதிக்குள் அவர்களின் மீன்பிடி ஆதிக்கம் காணப்படுகின்றது.

இந்தியாவின் இழுவைப்படகுகளால் இலங்கையில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் உள்ள மீனவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் இலங்கை அரசாங்கம் காத்திரமான ஒரு செயற்பாட்டை முன்னெடுப்பது இல்லை.

கடந்த அரசாங்கத்தில் இருந்த போது எங்களுடைய தொடர்ச்சியான அழுத்தங்களால் பல இந்தியப் படகுகள் பிடிக்கப்பட்டுள்ளமையோடு கட்டுப்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட்டது.

ஆனால் தற்போது மன்னார், முல்லைத்தீவு மீனவர்களை பாதிக்கும் அளவிற்கு இந்திய இழுவைப்படகுகள் வந்து செல்கின்றன.

கடற்றொழில் அமைச்சரும், அரசாங்கமும் இந்த விடயத்தில் மௌனம் காத்து வருகின்றன.

இதற்குப் பிரதானமான காரணம் இந்தியாவிற்குப் பயந்து அவர்கள் முடிவுகளை எடுக்கத் தயங்குகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சரிடமும் நான் நேரடியாகத் தெரிவித்துள்ளேன்.

அரசாங்கத்திடமும் பல முறை நாடாளுமன்றத்தில் கதைத்துள்ளேன். ஆனால் இவ் விடயத்தில் கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

அண்மைக்காலமாக மிக மோசமாக இந்திய இழுவைப்படகுகள் வந்து வட கடலில் இருக்கின்ற எமது மீனவர்களின் வலைகளையும், படகுகளையும், மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்தி சென்றுள்ளனர்.

இதனால் எமது மீனவர்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் கடல் தொழில் அமைச்சு மௌனமாக இருப்பதைவிட கடல்தொழில் அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்து ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும்.

வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் கடல் தொழில் அமைச்சராக இருந்தும் கூட வடமாகாண மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும் நிலையில் அவர் மௌனமாக இருக்கின்றமையை விட சிங்களவர் ஒருவர் கடற்றொழில் அமைச்சராக இருந்தால் எமது அழுத்தத்தின் காரணமாகஓர் அளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். கடற்றொழில் அமைச்சின் தற்துணிவு இல்லாத நிலையே வட பகுதி மீனவர்கள் இந்திய இழுவைப் படகு மூலம் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

- என அவர் தெரிவித்தார். மேலும் மாகாணசபைத்தேர்தல்மற்றும்பொருள்களின் விலை ஏற்றங்கள் குறித்தும் கருத்து தெரிவித்தார்.

# இடி தாங்கி விற்பனை செய்ய மோசடியாக பணம் சேர்த்த பொலிஸின் 9 பேர் கைது!



இடி தாங்கி ஒன்றை வெளிநாட்டில் உள்ள ஒருவருக்கு விற்பனை செய்து, அதன் பின் சுமார் 100 கோடி ரூபா பணம் தருகிறோம் எனக் கூறி ஒருவரிடம் பல லட்சம் ரூபா பணம் பெற்று மோசடியில் ஈடுபட்ட 9 சந்தேகநபர்களை நுவரெலியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நுவரெலியா குற்ற விசாரணை பிரிவின் பொலிஸ் அதிகாரிகளுக்கு நேற்று (திங்கட்கிழமை) கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவ்வாறு 9 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் இருவர் கைது செய்யப்பட்டு அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி ஒருவரின் பின் ஒருவராக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களில் பொலிஸ் அதிகாரி ஒருவரும், போலி வைத்தியர் ஒருவரும், போலி சட்டத்தரணி ஒருவரும் அடங்குகின்றனர்.

இடி தாங்கி ஒன்றைக் கொள்வனவு செய்ய பணம் தேவைப்படுவதாகவும், அந்த இடி தாங்கியை வெளிநாட்டில் உள்ள ஒருவருக்கு விற்ற பின்னர் கிடைக்கும் பணத்தில் பாரிய தொகையை இலாபமாகத் தர முடியும் எனக் கூறியே இந்த மோசடி நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 35 வயதுக்கும் 60 வயதுக்கும் இடையிலான கொழும்பு, கண்டி, கெக்கிராவை மற்றும் இரத்மலானை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

அத்தோடு, இவர்கள் பயன்படுத்திய இரு வான்கள் மற்றும் ஒரு கார் ஆகியன நுவரெலியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ள நிலையில், கோடிக்கணக்கான மோசடி செய்யப்பட்ட பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் அவர்களது கையடக்க தொலைபேசிகளில் இருந்த இடி தாங்கி படம் ஒன்றைக் காண்பித்து, வெளிநாட்டில் உள்ள நபர் ஒருவருக்கு 30 ஆயிரம் கோடி ரூபாவுக்கு இதனை விற்பனை செய்யவுள்ளோம், இந்த இடி தாங்கியை எடுப்பதற்கு ஒரு தொகை பணம் தேவைப்படுவதாக கூறி ஒருவரிடமிருந்து 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அந்தப்பணத்தை வழங்கும் நபருக்கு, இடி தாங்கியை விற்ற பின்னர் 100 கோடி ரூபாவைத் தம்மால் இலாபமாகத் தர முடியும் எனவும் சந்தேக நபர்கள் கூறியுள்ளனர்.

இதன்போது போலி சட்டத்தரணியாக நடித்துள்ள ஒருவர், போலி சட்டத்தரணி முத்திரை ஒன்றையும் பயன்படுத்தி, அதனைக் கொண்டு பணம் செலுத்தும் நபர்களுடன் போலி ஒப்பந்தம் ஒன்றும் நுவரெலியாவில் விடுதி ஒன்றில் வைத்து கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையிலேயே குறித்த பண மோசடி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு சந்தேக நபர்களைக் கைது செய்யும் போது, அவர்கள் மோசடி செய்த ஒரு கோடியே 33 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம் நுவரெலியா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஒன்பது பேரையும் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நுவரெலியா மாவட்ட குற்ற விசாரணை பிரிவின் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தனிமைப்படுத்தல் மீறல் 94 பேர் கைதாகினர்

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் இன்றுகாலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் மேலும் 94 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கடந்த வருடம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் மொத்தம் 80 ஆயிரத்து 654 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளில் நேற்றைய தினம் மொத்தமாக ஆயிரத்து 414 வாகனங்களில் பயணித்த 2 ஆயிரத்து 258 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் உரிய காரணமின்றி 186 வாகனங்களில் பயணித்த 317 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

# நிருபமா ராஜபக்ஷவையும் விசாரணைக்கு அழைப்பு!



பண்டோரா பேப்பர்ஸ் சர்ச்சையில் சிக்கியுள்ள முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷவை விசாரணைக்கு அழைக்க லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டன் சென்றுள்ள அவர், விசாரணைக்கு வருகை தராவிட்டால் சர்வதேச பொலிஸார் ஊடாக அவரை இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பண்டோரா பேப்பரஸ் வெளியிட்ட தகவலுக்கு அமைய, சட்டவிரோதமாக வெளிநாடுகளில் கோடிக்கணக்கில் சொத்துக்களைக் குவித்துள்ள பிரபலங்களின் பட்டியலில், முன்னாள் அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ மற்றும் இவரது கணவரின் பெயரும் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. நிருபமா ராஜபக்ஷவின் கணவர் திருக்குமார் நடேசன் பல இரகசிய நிறுவனங்கள் மூலம் செய்த பரிவர்த்தனைகள் தொடர்பாகத் தகவல்களும் பண்டோரா பேப்பரஸ் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, 2011 ஆம் ஆண்டு நிலைவரப்படி திருக்குமார் நடேசனின் சொத்துக்களின் பெறுமதி 16 கோடி டொலர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2021இல் வெளியிடப்பெற்றது.